**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 26.02.2026

அசல் வழக்கு எண். 16/2010

வா.சா. 1 – சிவபிரகாச ஸ்ரீ வீரேஸ்வர தேசிகேந்திர சுவாமிகள்,

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

காஞ்சிபுரத்தில் நெடுமாமிடி மடத்தின் வரலாறு உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். கேள்விப்பட்டது தான் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு வரை அனைத்தும் தெரியும். மடம் 500 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிறது. 1959க்கு பிறகு இந்த மடத்திற்கு யாராவது மடாதிபதியாக நியமிக்கப்பட்டார்களா என்றால் 21.01.2007 அன்றுதான் மடாதிபதியாக பதவியேற்றேன் அதற்கு முன்பு தெரியாது. அவ்வாறு நீங்கள் பொறுப்பு ஏற்றதற்கு ஆவணங்கள் இருக்கிறதா என்றால் பதிவு செய்யப்பட்டு உள்ளது. எந்த இடத்தில் பதிவு செய்தீர்கள் என்றால் பெங்களூருவில் உள்ள மடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த பதிவேடு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து கொண்டீர்களா என்றால் செய்துள்ளேன் அவர் நீங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. பொது அதிகார பத்திரம் தவிர வேற பத்திரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஈஸ்வரய்யா மீது நீங்கள் வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் அவர்தான் முதலில் வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கில் நீங்கள் தரப்பினராக இல்லை என்றால் சரியில்லை. பீடாதிபதி முதலிலும் இரண்டாவதாக நானும் இருக்கிறேன். மடாதிபதியோ அல்லது பீடாதிபதியோ வழக்கில் ஏதாவது பதில் தாக்கல் செய்தார்களா என்றால் இரண்டு பேரும் சேர்ந்து ஒன்றாக பதில் தாக்கல் செய்தோம். அந்த வழக்கில் சங்கதிகளை படித்து பார்த்து தெரிந்து கொண்டீர்களா என்றால்

தெரிந்து கொண்டேன். சொத்து எங்களுக்கு வேண்டும் என்று கேட்டுள்ளார். ஈஸ்வரய்யா என்ன சொல்லி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் தெரியாது. ஈஸ்வரய்யா என்பவர் வழக்கினை அவருக்கு ஏற்கனவே ஏற்பட்ட கடிதத் தொடர்பு படி 60க்கு 40அடி காலிமனையும் மற்றும் அவரே ரூபாய் 6 லட்சம் செலவு செய்து வீடு கட்டியதாகவும் தனக்கு பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி தெரியாது. அது மடத்து சொத்து ஆகும். அவர் பீடாதிபதிக்கும் அவருக்கும் ஏற்பட்ட கடிதப் போக்குவரத்து அனைத்தும் தாக்கல் செய்துள்ளார் அதை படித்து பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்த்தேன். அவ்வாறு எத்தனை ஆவணங்கள் படித்து பார்த்தீர்கள் என்றால் அனைத்தும் படித்துப் பார்த்தேன். 60க்கு 40அடி பதிவு செய்து கொடுக்க வேண்டும் என்று அந்த கடிதத்தில் சொல்லி உள்ளாரா என்றால் அவர் கேட்டார். அதற்கு பீடாதிபதி என்ன பதில் அனுப்பினார் தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் பீடாதிபதி 50 ஆண்டுகாலம் சேவை செய்ததால் நீங்கள் கேட்டவாறு எழுதி கொடுக்கிறேன் என்று பதில அனுப்பினார் என்றால் தெரியாது. 21.01.2007 அன்றிலிருந்து எத்தனை காலமாக மடாதிபதியாக இருக்கிறீர்கள் என்றால் தற்பொழுது வரை நான் தான் மடாதிபதியாக இருக்கிறேன். எனக்கு மடம் தேவையில்லை என்று நீங்கள் வெளியேறி விட்டீர்கள் என்றால் மடம் தேவையில்லை என்று நான் சொல்லவில்லை வேறு ஒரு மடத்திலிருந்து இரண்டையும் பார்த்துக் கொண்டேன். என்று நீங்கள் ராஜினாமா செய்தீர்கள் என்றால் தெரியவில்லை. மீண்டும் பதவி ஏற்றது 20.12.2017 ஆகும். மடத்தின் பதவியை ராஜினாமா செய்து விட்டு பெயர் மாற்றம் செய்து கொண்டீர்கள்

என்றால் சரிதான். மீண்டும் மடத்தில் சேர்ந்து பதிவு செய்து கொண்டேன். ராஜினாமா செய்த பிறகு எத்தனை காலம் நீங்கள் பெயரை மாற்றிக் கொண்டீர்கள் என்றால் என்னுடைய ராஜினாமாவை அவர் ஏற்கவில்லை. எவ்வளவு காலம் பெயர் மாற்றி வைத்துக் கொண்டீர்கள் என்றால் சுமார் ஒரு மாதம் இருக்கும். அதனை கெஜட் நோட்டீஸ் கொடுத்தீர்களா என்றால் கொடுத்தேன். ஆதார் கார்டில் என்ன பெயர் இருக்கிறது என்றால் இரண்டு பெயரும் இருக்கிறது. கையில் ஆதார் கார்டு வைத்திருக்கிறீர்களா என்றால் என்னிடம் இல்லை. இதுவரை ஆதார் கார்டில் சுவாமி சிதாபானந்தா என்று இருக்கிறது என்றால் இரண்டு பெயரும் ஒரே நபர் தான். ஆதார் கார்டில் சிதபானந்தா என்று தான் உள்ளது என்றால் சரியில்லை இரண்டு பெயரும் உள்ளது. மடத்திற்காக வங்கி கணக்கு இருக்கிறதா என்றால் இருக்கிறது. எந்த வங்கியில் வங்கி கணக்கு இருக்கிறது என்றால் ஸ்டேட் பேங்கில் வங்கி கணக்கு இருக்கிறது காஞ்சிபுரத்தில் அந்த வங்கி உள்ளது. அது யார் பெயரில் இருக்கிறது என்றால் பீடாதிபதி பெயரில்தான் இருக்கிறது. நீங்கள் நிர்வாகம் செய்வதாக சொல்கிறீர்கள் அதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து கொண்டீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 01.08.2000 அன்று ஈஸ்வரன் ஐயாவை நீங்கள் மிரட்டினீர்கள் என்றால் நான் மிரட்டவில்லை நான் மிரட்ட வேண்டிய அவசியம் இல்லை. பொது அதிகாரம் கொடுப்பதற்கு முன்பாகவே போலீசை வைத்து காலி செய்து விடுவேன் என்று மிரட்டினீர்கள் என்றால் சரியில்லை. ஈஸ்வரய்யா வழக்கில் தாக்கல் செய்த பதில் படித்து பார்த்தீர்களா என்றால் படித்துப் பார்த்தேன். ஈஸ்வரய்யா மடத்தின் சார்பாக 20 வழக்குகளை தாக்கல் செய்து மடத்து

சொத்தை காப்பாற்றியதாக குறிப்பிட்டுள்ளார் அது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பீடாதிபதியும் அவர்களும் பேசிக் கொண்டிருப்பார்கள் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த 20 வழக்குகளுக்கும் உங்களுக்கு ஆஜராகும் வக்கீல் அவர்கள் தான் தற்பொழுது உங்களுக்கு ஆஜர் ஆகிறார்கள் என்றால் தெரியாது. பாலகிருஷ்ணன் என்கிற வழக்கறிஞருக்கு அதிகாரம் கொடுத்து வழக்குகளை தாக்கல் செய்ய அனுமதி வழங்கியது யார் என்றால் என்னை குழப்பும் வகையில் கேள்வி இருக்கிறது ஆகையால் நான் பதில் அளிக்க விரும்பவில்லை. மடத்தில் உள்ள வீட்டில் தற்பொழுது யார் இருக்கிறார்கள் என்றால் ஈஸ்வர்யா அவரது பிள்ளைகள் இருக்கிறார்கள். அந்த வீட்டிற்கு சொத்து வரி யார் கட்டுகிறார்கள் என்றால் மடத்தின் பெயரில் இருக்கிறது. யார் கட்டுகிறார்கள் என்று தெரியாது நாங்கள் சிறிது காலம் கட்டினோம். அந்த வரி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளோம். எங்கள் கையில் இருக்கிறது. வாடகை வசூலிக்கிறோம். வாடகையை கேட்டோம் கொடுக்கவில்லை. வாடகை கேட்டும் கொடுக்கவில்லை ஏன் கொடுக்கவில்லை என்றால் ஈஸ்வரய்யாவை தான் கேட்க வேண்டும். பீடாதிபதி ஒரு சன்யாசி மடாதிபதியாக நீங்களும் ஒரு சன்யாசி ஆகவே ஒரு சன்யாசி மற்றொரு சன்யாசிக்கு பொது அதிகாரம் கொடுத்தால் செல்லாது என்றால் சரியில்லை. மூன்றாவது நபர்களுக்கு தான் அதிகாரம் அளிக்க முடியும் மடாதிபதியும் பீடாதிபதியும் பொது அதிகாரம் கொடுத்துக் கொள்ள முடியாது என்றால் சரி இல்லை. எந்த அடிப்படையில் வாடகையை கேட்கிறீர்கள் என்றால் அவர் ராஜினாமா செய்து விட்ட பிறகு அவருக்கு இருக்க எந்த உரிமையும் கிடையாது ஆகவே வாடகை

கேட்டோம். நீங்கள் மடத்தை விட்டு வெளியேறிய பிறகு ராஜினாமா செய்து விட்ட பிறகு உங்களுக்கு பொது அதிகார பத்திரத்தின் படி அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. ராஜினாமா செய்ததை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ராஜினாமா செய்ததை ஏற்க வில்லை என்றால் ஏன் பெயரை மாற்றிக் கொண்டீர்கள் என்றால் வேறு பெயர் இருக்க வேண்டும் என்பதற்காக மாற்றிக் கொண்டோம். கெஜட் நோட்டீஸில் இரண்டு பெயரும் உள்ளவாறு நோட்டீஸ் கொடுத்தீர்களா என்றால் இரண்டு பெயரும் ஒருவரே ஆகும். ரிஜிஸ்டர் செய்துள்ளோம் எனக்கு நினைவில்லை. உங்களுக்கு வழக்கு தாக்கல் செய்ய எதிர் வழக்கு நடத்த உரிமை இல்லை என்று சொன்னால் சரி இல்லை. உங்கள் ராஜினாமாவை ஏற்றுக் கொண்டு கோபிநாத் என்பவரை 20.01.2018 அன்று பீடாதிபதியாக நியமித்தார் என்றால் தெரியாது. உங்களுடைய ராஜினாம ஏற்கப்பட்டது உங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரி இல்லை

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram